மாலை முரசு

பக்கங்கள் 12+3

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 26 சனிக்கிழமை 08.02.2025 | அதிர்வு 191

## இ.போ.ச. பஸ் சாரதி மீது வாள்வெட்டுத் தாக்குதல்!

### விசுவமடுவில் பயங்கரம்

முல்லைத்தீவு, விசுவமடு பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸின் சாரதி மீது வாள்வெட்டுத் தாக்குதல் 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# இலங்கையின் பாதுகாப்பு விடயத்தில் இந்தியா அசைக்க முடியாத ஆதரவு!



### தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு

இலங்கையின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதில், குறிப்பாக பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் இந்தியாவின் அசைக்க முடியாத ஆதரவை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற எயா வைஸ் மார்ஷல் சம்பத் துய்ய கொந்தாவுக்கும் இடையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 02

## மாற்றுக் காணி என்ற பேச்சுக்கே இடமில்லை; சொந்த நிலத்தையே நாங்கள் கோருகின்றோம்

# பௌர்ணமியன்று பெரும் போராட்டம்

### தையிட்டி விகாரைக் காணி உரிமையாளர்கள் அழைப்பு




(எஸ்.நிதர்ஷன்)

"பூர்வீக நிலத்தின் உரிமையாளர்களாகிய நாம் உரிமங்களுடன் இருக்கத் தையிட்டி விகாரை நிர்மாணிக்கப்பட்ட நிலப்பரப்பும், அதனை அண்டிய மக்களின் காணி நிலங்களும் விகாரைக்குரியவை என்று கூறுவதை ஏற்க முடியாது. 02

# இந்தியத் தூதுவர் - மனோ அணி சந்திப்பு





இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவைத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தூதுக் குழு சந்தித்தது.

கொழும்பு இந்தியன் இல்லத்தில் நேற்று நிகழ்ந்த இந்தச் சந்திப்பில், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம் எம்.பி., வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி., கட்சியின் சர்வதேச விவகார உப தலைவர் பாரத் அருள்சாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தியத் தரப்பில் தூதுவருடன், அரசியல் துறை இரண்டாம் 02

# மூதாட்டியைக் கொலை செய்து சடலத்தை தீ வைத்து எரித்த முன்னாள் சிப்பாய் கைது

வீடொன்றில் மூதாட்டியைக் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்து விட்டு சடலத்தைத் தீ வைத்து எரித்த முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் இன்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

ராகம, தலகொல்ல பிரதேசத்தில் வசிக்கும் 39 வயதுடைய முன்னாள் இராணுவச் சிப்பாயே கைது செய்யப்பட்டவர் ஆவார்.

மேற்படி நபர் கடந்த 5 ஆம் திகதி ராகம, தலகொல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்துள்ள நிலையில் அங்கிருந்த 76 வயதுடைய மூதாட்டி ஒருவரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்து விட்டு பின்னர் சடலத்தை தீ வைத்து எரித்து அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இந்நிலையில், மூதாட்டியின் கணவரும் மகனும் வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு மீண்டும் வீடு திரும்பியுள்ள நிலையில், மூதாட்டி சடலமாகக் கிடப்பதைக் கண்டு உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சந்தேகநபரான முன்னாள் இராணுவச் சிப்பாய் இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நீதிமன்ற வழக்கு விசாரணை ஒன்றுக்குத் தேவையான பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக குறித்த வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து பணம் மற்றும் பெறுமதியான பொருட்களைத் திருட முயன்றுள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ராகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இலங்கையின்...**

விசேட சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதில் இதன்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டதோடு, பண்டைய வரலாற்றிலிருந்து பிணைந்திருக்கும் இந்திய – இலங்கை இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டது.

பிராந்திய பாதுகாப்பு மற்றும் கடல் சார் ஒத்துழைப்பு மூலம் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர்.

இலங்கையின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதில், குறிப்பாக பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், கடல்சார் பாதுகாப்பு சவால்கள் மற்றும் அவசரகால பேரிடர் சூழ்நிலைகளுக்கு பதிலளிப்பதில் இந்தியாவின் அசைக்க முடியாத ஆதரவை இந்தியத் தூதுவர் உறுதிப்படுத்தினார்.

இந்தியா இன்று வரை வழங்கி வரும் தொடர்ச்சியான ஆதரவுக்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

மேலும் பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதில் இந்திய – இலங்கை பாதுகாப்பு கூட்டாண்மையின் முக்கிய பங்கையும் உறுதிப்படுத்தினார்.

இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் இரு தரப்பினருக்கும் இடையே நினைவுப் பரிசுகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. பாதுகாப்பு அமைச்சின் இராணுவத் தொடர்பு அதிகாரியும் இந்தக் கலந்துரையாடலில் இணைந்துகொண்டார்.

**இந்தியத் தூதுவர்...**

செயலாளர் அசோக் குமாரும் கலந்துகொண்டார்.

இலங்கை – இந்திய நாடுகளுக்கு இடையிலான பொதுவான பொருளாதார, சமூக, கலாசார ஒத்துழைப்புகளைச் செயற்பாடுகளுக்கு மத்தியில், இலங்கை வாழ் தமிழ் மக்கள் குறிப்பாக இந்திய வம்சாவளி மலையக மக்கள் தொடர்பில் இந்தியாவின் விசேட கடப்பாட்டை இதன்போது வலியுறுத்தினோம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

**இ.போ.ச...**

மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணிகளை ஏற்றிச் சென்ற இ.போ.ச. பஸ்ஸின் சாரதி மீது விசுவமடுப் பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர்கள் வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான சாரதி படுகாயங்களுக்குள்ளான நிலையில் தர்மபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பயணிகளை இறக்குவதற்காக பஸ்ஸை நிறுத்தியபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன் காரணமாக பஸ்ஸில் பயணித்த பயணிகள் நடுவீதியில் நீண்ட நேரமாகக் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**பௌர்ணமி...**

மாற்றுக் காணி என்ற பேச்சுக்கே இடமில்லை." – என்று தெரிவித்துள்ள தையிட்டி காணி உரிமையாளர்கள், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் பௌர்ணமி நாளன்று மாபெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று சனிக்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பை முன்னெடுத்திருந்த குறித்த காணி நிலங்களின் உரிமையாளர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு க.ஜெயகுமார்,பா.பாஷ்கரன், சுகுமாரி சாருஜன் ஆகியோர் மேலும் கூறுகையில்,

"மக்களதுகாணிநிலங்கள்மக்களுக்கே சொந்தம். அவை மக்களுக்கு வழங்கப்படும் என ஜனாதிபதி அநுர அண்மையில் யாழ். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார். ஆனால், அவர் கூறிய கருத்துக்கு முரணாக தையிட்டி விவகாரம் இருக்கின்றது.

அகில இலங்கை பௌத்த மகா சபை ஒருபடி மேல் சென்று விகாரை கட்டப்பட்ட காணி நிலம் மட்டுமல்ல, அயலில் உள்ள காணி நிலங்களும் சுவீகரிக்கப்படும் என இறுமாப்புடன் கூறியுள்ளது.

அதேநேரம் தேர்தல் கலங்களில் தேசிய மக்கள் சக்தியின் இன்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் மூவரும் எம்முடன் இவ்விடயம் தொடர்பில் பேசி, கடந்த கால யாழ். நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றல்லாது, கடந்த அரசுகள் போலல்லாது தாம் ஆட்சிக்கு வந்ததும் இவ்விடயம் தீர்க்கப்படும் என எமக்கு வாக்குறுதியும் வழங்கியிருந்தனர்.

ஆனால், இன்று இம்மூவரும் பொம்மைகள் போன்று வாய்பேசாதுள்ளனர். நாம் எமது பூர்வீக நிலங்களையே கேட்கின்றோம்.

ஆளுநர் கூட எம்முடன் பேசிய விடயத்தை வேறு திசை நோக்கிக் கொண்டு செல்ல முயற்சித்து தவறான அர்த்தத்துடன் ஜனாதிபதிக்குக் கூறியிருந்தார். மாற்றுக் காணி என்ற பேச்சுக்கே இடமில்லை.

ஆனாலும், அன்று கஜேந்திரகுமார் எம்.பி. எமது பிரச்சினையை எடுத்திருந்தாலும் அவருக்குப் பலமாக ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைகொடுத்திருக்கவில்லை. இது வாக்களித்த எமக்கு ஏமாற்றத்தையே கொடுத்தது.

இந்நிலையில் எதிர்வரும் 11 ஆம் திகதி மாலை 4 மணியிலிருந்து மறுநாள் 12 ஆம் திகதி மாலை 6 மணி வரை எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நாம் முன்னெடுக்கவுள்ளோம்.

காணி உரிமையாளர்களாகிய எமது போராட்டத்துக்குப் பாரபட்சமற்ற வகையில் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், சிற்றூர்தி, ஓட்டோ சங்கங்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஆதரவை வழங்கி வலுச்சேர்க்குமாறு அழைப்பு விடுக்கின்றோம்." – என்றனர்.


Gsm
GUNAAM SUPERMARKET
குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
Gunams super market
super deal
7,8,9/02/2025
SPECIAL DEAL
900g Kings Curry Powder-14.99
Mega deal
100$ க்கு மேல் கொள்வனவு செய்து
Nestomalt Tin ஒன்றை இலவசமாக
பெற்றுக்கொள்ளுங்கள்
Nestle
NestOmalt
POWER
STRENGTH
ENERGY
1st cup
400g
Malted Food
+1 (416) 283-9998
1139 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மருத்துவர்களின் எச்சரிக்கை

இலங்கையின் மருத்துவத்துறை தொடர்பில் அபாய எச்சரிக்கை ஒன்றை அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் மீண்டும் வெளியிட்டிருக்கின்றது. ஒரு வகையில் இது ஆபத்துக்கான முனெச்சரிக்கை. இன்னொரு வகையில் அரசுக்கான அச்சுறுத்தல்.

இலங்கையில் சுமார் 7,000 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தீர்மானித்துள்ளனர் எனவும், சுமார் 2,000 வைத்தியர்கள் ஏற்கனவே நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் பணியாற்றி வருகின்றனர் எனவும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் பிரபாத் சுகததாஸ தெரிவித்தார்.

மேலும் 5,000 வைத்தியர்கள் தங்கள் வெளிநாட்டுப் பயணங்களுக்காகக் கடவுச்சீட்டுக்களைத் தயார் செய்துவிட்டுக் காத்திருக்கின்றனர் என்றும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

2025 வரவு - செலவுத் திட்டம் மூலம் வைத்தியர்களுக்கு அவர்களின் உரிமைகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில் 7,000 வைத்தியர்களுக்கு பற்றாக்குறை ஏற்படும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இலவச சுகாதார சேவைகள் தடையின்றி நீடிப்பதை உறுதிப்படுத்தும் வகையில் வைத்தியர்கள் நாட்டில் தொடர்ந்து தங்கியிருந்து பணியாற்றுவதை உறுதிப்படுத்தும் விதமான திட்டம் ஒன்றை 2025ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் சேர்ப்பதற்கான முன்மொழிவாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் சமர்ப்பிக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்த யோசனைத் திட்டத்தை அரசாங்கம் சாதகமாகப் பரிசீலித்து, அதனை வரவு - செலவு திட்டத்தில் உள்வாங்காவிட்டால் நாட்டின் மருத்துவத் துறையே முடங்கிவிடும் அளவுக்கு வைத்தியர்களின் வெளியேற்றம் இடம்பெறும் என்பதுதான் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் இப்போது வழங்கும் எச்சரிக்கையாகும்.

இது புதிய விடயம் அல்ல. கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக அரச மருத்துவர் தரப்பினர் நாட்டுக்கும் அரசுக்கும் வெளியிட்டு வரும் தொடர்எச்சரிக்கையில்பிந்தியதுதான் இது. அதேபோல மருத்துவர்கள் வெளியேற்றமும் தொடர்கின்றது. இதனால் மருத்துவ துறை நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றது என்பதும் மறுக்க முடியாத உண்மையே.

அனைத்து வகை வைத்தியர்களுக்கும் அவர்களின் தகுதிகள், செயல்திறன் மற்றும் சேவையின் உலகளாவிய மதிப்பு அல்லது பெறுமதி ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு ஒரு தனித்துவமான சம்பள கட்டமைப்பு மருத்துவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பது அவர்களின் சங்கத்தின் கருத்தாகும்.

பொருளாதாரத்தில் நொடித்துப் போயிருக்கும் அரசாங்கம் வேறு வழியின்றி சர்வதேச நாணய நிதியத்தில் தங்கியிருக்கும் நிலைமைக்கு வந்து விட்டது. நாணய நிதியத்தின் வழிகாட்டல்படியான சிக்கன வேலைத்திட்டத்தை அப்படியே பின்பற்றி அதனை வெகுஜனங்கள் மீது திணிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் அரசினால் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் கோரிக்கைக்கு - வலியுறுத்தலுக்கு - அச்சுறுத்தலுக்கு - இணங்க முடியுமா என்பது கேள்விக்குறியே.

# வடக்கு உத்தியோகத்தர்களின் பயிற்சிக்கு 4 ஆண்டுகளில் 2 கோடியே 39 லட்சம் ரூபா!

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண உத்தியோகத்தர்களுக்கு 4 ஆண்டுகள் இடம்பெற்ற பயிற்சி வகுப்புகளுக்கு 2 கோடியே 39 லட்சத்து 69 ஆயிரத்து 686 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபைக்கு உள்பட்ட திணைக்களங்கள், அமைச்சுக்களில் கடந்த நான்கு ஆண்டுகளில் உத்தியோகத்தர்களின் பயிற்சி நெறிகளுக்காக எவ்வளவு பணம் செலவிடப்பட்டது, அந்த நிதிகள் பெறப்பட்ட மூலங்கள் எவை என தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கோரப்பட்ட வினாவுக்கு வடக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகு வழங்கிய தகவலிலேயே இந்தத் தொகை உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு செலவிடப்பட்ட 2 கோடியே 39 லட்சத்து 69 ஆயிரத்து 686 ரூபா வில் 2021 ஆம் ஆண்டு 36 லட்சத்து 68 ஆயிரத்து 973 ரூபா செலவிடப் பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு 49 லட்சத்து 58 ஆயிரத்து 414 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் 48 லட்சத்து 88 ஆயிரத்து 512 ரூபா செலவிடப் பட்டுள்ளது.

2024 இல் சடுதியாக அதிகரித்து ஒரு கோடியே 4 லட்சத்து 53 ஆயிரத்து 786 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

2021, 2022, 2023 ஆகிய மூன்று ஆண்டுகளும் மேற்கொண்ட செலவீனங்கள் முழுமையாக மூலோபாய அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் இருந்து (மாகாண அபிவிருத்தி ஒதுக்கீடு) செலவிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் 43 லட்சத்து 49 ஆயிரத்து 489 ரூபா மூலோபாய அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் இருந்தும் எஞ்சிய நிதிகளில் 48 லட்சத்து 52 ஆயிரத்து 236 ரூபா உள்ளூராட்சி நிறுவனங்களின் இயலளவு விருத்திக்கான யு.என்.டி.பி. நிதியிலும் ஏனைய நிறுவனங்களில் இருந்து 12 லட்சத்து 69 ஆயிரத்து 61 ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது என்று குறிப்பிடப் பட்டுள்ளது.



# உடப்பு திரௌபதியம்மன் ஆலய பொங்கல்

(க.மகாதேவன்)

வருடாந்த தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்திய பாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் இடம்பெற்றது.

இதன் போது, மரு (கும்பம்) மரபிசை சகிதம் சுமந்து வருதல், அத்துடன் மூலஸ்தான விஷேட பூஜைகள் இடம்பெற்று பொங்கல் நடைபெற்றது.

ஆலய முன்றலில் பொங்கல் இடம்பெற்றது.

ஆலயத்தின் பூஜைகளை சிவஸ்ரீ குமார பஞ்சாட்சர சிவாச்சாரியார் நடத்தி வைத்தார்.

EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME

(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# சுவையூட்டிக் கடைகளில் இரவு நேர திடீர் சோதனை

**(பாறுக் ஷிஹான்)**

சுகாதாரமற்ற கிழக்கு பொரியல் உட்பட சுவையூட்டிக் கடைகள் தொடர்பில் பொது மக்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களை அடுத்து உணவுப் பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொது மக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸஹீலா இஸ்ஸதீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே . மதன் தலைமையில் சென்ற சுகாதார குழுவினர் நேற்று வெள்ளிக்கிழமை (07) இரவு திடீர் சோதனைகளை நடத்தினர்.



கடந்த காலங்களில் சாய்ந்தமருது பிரதேச உணவகங்கள் உட்பட சுவையூட்டிய கிழங்குப் பொரியல் கடைகளின் சுகாதார நடைமுறைகளை பேணி உணவுகளை தயாரிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

உணவங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளுகையில் ஒழுங்கீன்மை, நீண்ட நாள்களுக்கு பொருத்தமில்லாதவாறு உணவுகளை தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருள்களின் தரம் போன்றவற்றை சுகாதார முறைப்படி பேணுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது.

அறிவித்தல்களை பேணி நடக்காத உணவகங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக சிரேஷ்ட மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஏ.எல்.எம். ஜெரின், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் சகிதம் சாய்ந்தமருது பிரதேச உணவு தயாரிக்கும், விற்பனை செய்யும் கடைகள், கிழங்கு பொரியல் தயாரிக்கும் கடைகள் திடீர் பரிசோதனை செய்யப்பட்டன.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவித்தல்களைப் பேணி நடக்காத உணவகங்களில் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகளும் வெயிலில் வைக்கப்பட்ட மற்றும் வடிகான்கள் மீது வைக்கப்பட்ட உணவுகள் மீட்கப்பட்டன.

இதன் போது மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற, முறையான களஞ்சிய வசதி இல்லாத மற்றும் பழுதடைந்த உணவுகளை வைத்திருந்தோருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகள் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டன. அதே போன்று சில உணவகங்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கத் தேவையான மேலதிக ஒழுங்குகளை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மேற்கொண்டுள்ளது.







# கலாபூஷணம் ஏ.பீர்முகம்மது எழுதிய தைலாப்பெட்டி நூல் அறிமுகம்!

(நூருல் ஹுதா உமர், எஸ். அஸ்ரப்கான்)

கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா 2024 இல் சிறந்த சிறுகதை நூலாக தெரிவு செய்யப்பட்ட கலாபூஷணம் ஏ.பீர்முகம்மது எழுதிய தைலாப்பெட்டி நூல் வெளியீடு அறிமுகம் இன்று (08) சனிக்கிழமை சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய ஏற்பாட்டில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய மணிப்புலவர் மருதூர் ஏ மஜீது அரங்கில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய பொஹுப்பதிகாரி யூ.கே.எம். நிம்ஸான் தலைமையில் நடைபெற்றது.

இந்த நூல் வெளியீட்டு விழாவில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆஸிக் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மேலும் கௌரவ அதிதிகளாக சபுத்தி அமைப்பின் தவிசாளர் கலாநிதி தமீர மஞ்சு, இலங்கை நீதிக்கான மையத் தலைவர் சட்டமுதுமாணி சௌபி எச். இஸ்மாயில், ஓய்வு நிலை அதிபர் திருமதி அ. பேரின்பராஜா, சபுத்தி அமைப்பின் பொதுச் செயலாளர் திருமதி இரோசானி கல்ஹேன ஆகியோர் கலந்து கொண்டனர்.

நூல் தொடர்பில் இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக மொழித் துறை தலைவர் கலாநிதி அபரசிரி விக்கிரமரத்ன, இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் எம். அப்துல் ரசாக், அக்கரைப்பற்று பேஜஸ் புத்தக இல்ல நிறைவேற்றுப் பணிப்பாளர் சிராஜ் மஷூர், சிரேஷ்ட எழுத்தாளர் செங்கதிரோன் ஆகியோர் சிறப்புரைகள் நிகழ்த்தினர்.



# முத்திரை குத்தாத, அனுமதியற்ற தராசுக்களை பாவித்துவந்த 43 பேரிடம் தராசுகள் பறிமுதல்!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வெல்லாவெளி, வவுணதீவு பட்டிப்பளை பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களில் உள்ள கடைகளில் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்கள அதிகாரிகள் இரு தினங்கள் முற்றுகையிட்டு பரிசோதித்து வந்துள்ளனர்.

முத்திரை குத்தப்படாத மற்றும் அனுமதியற்ற 43 தராசுக்கள் இதன்போது பறிமுதல் செய்யப்பட்டன. 14 பேருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்குதல் செய்துள்ளது என்று மாவட்ட அரச அதிபர் திருமதி ஜே.ஜே. முரளிதரன் தெரிவித்தார்.

மாவட்ட விவசாயிகள் தொடர்ச்சியாக செய்த முறைப்பாட்டுக்கமைய மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்கள பணிப்பாளர் விநாயகமூர்த்தி விக்கினேஸ்வரன் தலைமையிலான உத்தியோகத்தர்கள் வெல்லா வெளி, வவுணதீவு பட்டிப்பளை பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களில் உள்ள கடைகள் மற்றும் வயல் பகுதிகளில் நெல் கொள்வனவு செய்யும் இடங்கள் உள்ளிட்ட 110 இடங்களை கடந்த இரு தினங்களாக முற்றுகையிட்டு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.



# பாடசாலைகள் மற்றும் கல்வி வலயத்தில் நிலவும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு!

(அபு அலா, எஸ்.எம்.முபீன்)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் திருகோணமலை வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் குழுவுக்கும் இடையே கலந்துரையாடல் (07) திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது, பாடசாலைகளிலும் கல்வி வலயத்திலும் நிலவும் பிரச்சினைகள் குறித்து அதிபர்களால் தெரிவிக்கப்பட்டன.

இதன்படி, பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்கள் தொடர்பான பிரச்சினைகள், கற்பித்தல் சேவையில் ஈடுபடும் தொண்டர் ஆசிரியர்கள் தொடர்பான பிரச்சினைகள், பாடசாலைகளில் நில உரிமை தொடர்பான பிரச்சினைகள், பாடசாலைலில் பௌதீக வளங்களின் பற்றாக்குறை, கல்விசாரா ஊழியர்களின் பற்றாக்குறை மற்றும் கல்வி வலய அலுவலகத்தில் உள்ள பணியாளர் வெற்றிடங்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் விரிவாக ஆராயப் பட்டது.



# மட்டக்களப்பு ஏத்தாளைக் குளத்துக்கு படையெடுத்து வந்துள்ள பறவைகள்!

(பழுவூரான்)

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு ஏத்தாளைக் குளத்துக்குக் கடந்த வருடத்தைப் போல் இந்த முறையும் பல்வகைப்பட்ட வெளிநாட்டுப் பறவைகள் வந்திருப்பதைக் காண முடிகின்றது.

இந்தப் பறவைகள் சரணாலயத்தில் ஒவ்வொரு வருடமும் இனப்பெருக்கத்துக்காக ஜனவரி மாதத்தில் வந்து தஞ்சமடையும் பறவைகள் முட்டையிட்டு குஞ்சு பொரித்து குஞ்சுகள் வளர்ந்தவுடன் மீண்டும் வெளிநாடுகளை நோக்கி தமது குஞ்சுகளுடன் பயணமாகின்றமை வழமை.

இந்த ஏத்தாளைக் குளத்தில் இந்தப் பறவைகள் வாழக் கூடிய பிரத்தியேக சூழல் இருப்பதே இதற்கான காரணம் என்று கருதப்படுகின்றது.

இந்தப் பறவைகளைக் காண சுற்றுலா பிரயாணிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள், பொ மக்கள் என அதிகளவானோர் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நளீம் எம்.பி. மீது தாக்குதல்!

**(மட்டு. துஷாரா, அபு அலா, எஸ்.எம்.முபீன்)**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.நளீம் இன்று காலை ஒரு குழுவினரால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தாக்குதலுக்குள்ளான நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தத் தாக்குதல் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐஸ் போதைப் பொருளுடன் சம்மாந்துறையில் ஒருவர் கைது!

**(தில்சாத் பர்வீஸ்)**

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரபல பாடசாலைக்கு பின்பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் நேற்று வெள்ளிக்கிழமை (07) களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப் படையினர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவரை களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

புளக் ஜே கிழக்கு 03, சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய சந்தேக நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 1 கிராம் 60 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர், சான்றுப்பொருளுடன் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



இந்தக் கைது நடவடிக்கையானது களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஏ.பி.ஏ. தில்சான், சார்ஜன் அஜித், சார்ஜன் குமார, விசேட அதிரடிப் படை பொலிஸ் உத்தியோகத்தர்களான மதுசான், ஜயதிர, தரங்க உள்ளிட்ட அதிகாரிகள் இக் கைது நடவடிக்கையில் ஈடுபட்டனர்.







# 396 போட்டியாளர்கள் பங்கேற்ற பற்றிமாவின் மாபெரும் மரதன்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

396 போட்டியாளர்கள் பங்குபற்றிய மாபெரும் மரதன் ஓட்டப் போட்டி கல்முனையில் இடம்பெற்றுள்ளது.

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவைச் சிறப்பிக்கும் வகையில் இந்தப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியின் நிகழ்வுகளில் ஒன்றான மரதன் ஓட்டம் பாடசாலையின் அதிபர் அருட்.சகோ.எஸ்.இ.றெஜினோல்ட் தலைமையில் இன்று (08)இடம்பெற்றது.

நிகழ்வில் அதிதிகளாக கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தின் கணக்காளர் க.லிங்கேஸ்வரன், சமபத் வங்கியின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண பிரதம முகாமையாளர் நிதர்சன் டேவிட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மரதன் ஓட்டப் போட்டியில் 162 பெண் மாணவர்களும் 234 ஆண் மாணவர்களும் பங்கேற்றனர்.

நிகழ்வை நடத்தி முடிப்பதற்கு ஒத்துழைப்புக்களையும், உதவிகளையும் வழங்கிய கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர், வைத்தியர்கள், தாதிகள் மற்றும் ஏனைய ஊழியர்களுக்கும், கல்முனை பொலிஸ் நிலைய பெறுப்பதிகாரி, வீதிப்போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும், பாடசாலையின் ஜுபிலி குழுவின் உறுப்பினர்கள், டொல்பின் மற்றும் றோயல் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள், வாகன வசதிகளை வழங்கியோர், உடற்கல்வி ஆசிரியர்கள், இல்லங்களுக்கு பொறுப்பான ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்கிய பெற்றோர்களுக்கும், எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஆகியோருக்குப் பாடசாலைச் சமூகம் நன்றி தெரிவித்துள்ளது.

# திருக்கோணேஸ்வர ஆலயத்தின் பொதுச் சபைப் பொதுக் கூட்டம்

திருகோணமலை மாவட்ட திருக்கோணேஸ்வர ஆலயத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான பொதுச் சபை ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளை 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று ஆலய அன்னதான மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாக சபை கேட்டுள்ளது.

# திருமலை - கொழும்பு பகல்நேர ரயில் சேவையை மீள ஆரம்பிக்குக

## இம்ரான் எம்.பி. கோரிக்கை



(ஹஸ்பர் ஏ.எச்.)

இடைநிறுத்தப்பட்டுள்ள திருகோணமலை – கொழும்பு பகல்நேர ரயில் சேவையை மீள ஆரம்பிக்குமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் போக்குவரத்து நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமானப்போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சரை நேரில் சந்தித்து மகஜரைக் கையளித்து இது தொடர்பாக தெளிவு படுத்திய இம்ரான் எம்.பி. குறிப்பிட்டுள்ளதாவது,


கடந்த சில வருடங்களாகத் திருகோணமலையில் இருந்து கொழும்புக்கு பயணித்து வந்த கடுகதி ரயில் சேவை தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இந்தச் சேவையை பயன்படுத்தி வந்த பொது மக்கள் பெருங் கவலையடைந்துள்ளனர்.

தமது உற்பத்திப் பொருள்களைக் கொண்டு செல்லும் ஏழை விவசாயிகளும், கொழும்புக்கு வைத்திய சிகிச்சைக்காக செல்லும் நோயாளிகளும் இந்த ரயில் சேவையை அதிகமாகப் பயன்படுத்தி வந்தனர்.

இதனைவிட திருகோணமலைக்கு வருகை தரும் உல்லாசப் பயணிகளும் அதிகளவில் இந்த ரயில் சேவையைப் பயன்படுத்தி வந்தனர்.

தற்போது இந்தச் சேவை திடீரென இடைநிறுத்தப்பட்டுள்ளதால் பொது மக்களும், உல்லாசப் பிரயாணிகளும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே, இந்த ரயில் சேவையை மீள ஆரம்பிக்க வேண்டும்.– என்றார்.

இவற்றைச் செவிமடுத்த அமைச்சர் விரைவில் இது குறித்த நல்ல தீர்மானம் ஒன்றுக்கு வருவார் என்று வாக்குறுதி அளித்தார்.



# இராமகிருஷ்ண மிஷன் கிளை கொட்டகலையில் திங்கள் திறப்பு !

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை ராமகிருஷ்ண மிஷன் மலையகத்துக்கான முதலாவது கிளையை நுவரெலியா கொட்டகலையில் நாளை மறுதினம் (10) திங்கட்கிழமை காலை திறந்து வைக்கவுள்ளது.

வரலாற்றில் முதல் தடவையாக மலையகத்தில் பகவான் ராமகிருஷ்ண ஆலயமும், சிவானந்த நலன்புரி நிலையமும் திறந்து வைக்கப்படவுள்ளன.

இலங்கை ராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீத் சுவாமி அக்ஷராத்மானந்தஜீ தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் சகல ஏற்பாடுகளையும் கவனித்து வரவேற்புரை நிகழ்த்தவுள்ளார்.

பிரதம அதிதியாக உலகளாவிய ராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடங்களின் துணைத்தலைவர் ஸ்ரீமத் சுவாமி சுஹிதானந்த ஜி மகராஜ் கலந்து சிறப்பிக்க இலங்கை வருகிறார்.

இந்தியா காசி ராமகிருஷ்ண மடம் தலைவர் சுவாமி சர்வரூபானந்த ஜி மகாராஜ், மதுரை ராமகிருஷ்ண மடம் தலைவர் சுவாமி நித்யதீபானந்த ஜீ மகராஜ் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொள்ள வருகை தந்துள்ளனர்.

கும்பாபிஷேகக் கிரியைகளை சிவாகம கலாநிதி சிவஸ்ரீ கு. வை.க .வைத்தீஸ்வர குருக்கள் நடத்தி வைக்கவுள்ளார்.





# டில்லியில் ஆட்சியை கைப்பற்றும் பா.ஜ.க; கேஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சி தோல்வி!

26 ஆண்டுகளுக்குப் பின்னர் டில்லியில் மீண்டும் ஆட்சி அமைக்கிறது பா.ஜ.க. மொத்தமுள்ள 70 தொகுதிகளில் 48 இடங்களைக் கைப்பற்றும் நிலையில் இருக்கிறது அக்கட்சி. அதேவேளையில், வெறும் 22 தொகுதிகளை மட்டும் வசமாக்கவுள்ள ஆம் ஆத்மி ஆட்சியை இழக்கிறது. முன்னாள் முதல்வர் கேஜ்ரிவால் தோல்வியைத் தழுவினார்.

டில்லி சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி இன்று காலை 8 மணிக்கு தொடங்கியது. 19 இடங்களில் வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது. முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டு தொடர்ந்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன. ஆரம்பம் முதலே பா.ஜ.க. நிலையான ஆதிக்கத்தை செலுத்திவந்தது. பிற்பகல் 2 மணி நிலவரப்படி பா.ஜ.க. 48 இடங்களை வசப்படுத்துகிறது. அமோக வெற்றி உறுதியாவதால் டில்லி பா.ஜ.க. அலுவலகம் கொண்டாட்டங்களால் களை கட்டியுள்ளது. ஆம் ஆத்மி கட்சி 22 இடங்களை மட்டுமே கைப்பற்றும் நிலையில் உள்ளது. காங்கிரஸ்/க்கு பூஜ்ஜியமே மிஞ்சுகிறது.

தற்போதைய நிலவரப்படி ஆளும் ஆம் ஆத்மி கட்சி சார்பில் புதுடில்லியில் போட்டியிட்ட கட்சியின் ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதல்வருமான கேஜ்ரிவால், பா.ஜ.க. வேட்பாளர் பர்வேஷ் சாஹிப் சிங்கிடம் தோல்வியுற்றார். அதேபோல் ஆம் ஆத்மி முக்கியத் தலைவர் மணீஷ் சிசோடியா ஆகியோரும் தோல்வியைத் தழுவினர். டில்லி முதல்வராக பா.ஜ.க. பர்வேஷ் சாஹிப் சிங்கையே தேர்வு செய்யும் என்று கூறப்படுகிறது.

மணீஷ் சிசோடியா ஜங்புரா தொகுதியில் 600 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தார். தனது தோல்வி குறித்து அவர் குறிப்பிடுகையில்,

“கட்சித் தொண்டர்கள் சிறப்பாகப் போராடினர். நாங்கள் அனைவரும் கடுமையாக உழைத்தோம். மக்களும் எங்களை ஆதரித்துள்ளனர். ஆனால், நான் 600 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தேன். வெற்றி பெற்ற வேட்பாளரை நான் வாழ்த்துகிறேன். அவர் தொகுதிக்காக உழைப்பார் என்று நம்புகிறேன்.” என்றார்.

டில்லியில் அதிஷி தலைமையிலான ஆம் ஆத்மி ஆட்சி நடைபெறுகிறது. 70 உறுப்பினர்கள் கொண்ட சட்டப்பேரவைக்கு கடந்த 5 ஆம் திகதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இதில், 60.42 சதவீத வாக்குகள் பதிவாகின. டில்லி பேரவை தேர்தலில் ஆம் ஆத்மி, பா.ஜ.க, காங்கிரஸ் இடையே மும்முனை போட்டி நிலவியது. 70 தொகுதிகளில் மொத்தம் 699 வேட்பாளர்கள் களம் கண்டனர். தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் அனைத்துமே பா..ஜக. வெற்றி பெறும் என்றே கூறியிருந்தன.

.இந்நிலையில், இன்று மதியம் நிலவரப்படி பா.ஜ.க. 48 இடங்களை வசப்படுத்துகிறது. வெற்றிக்கு 36 தொகுதிகள் போதுமென்ற நிலையில் மாபெரும் வெற்றியை நோக்கி பா.ஜ.க. முன்னேறி வருகிறது. இதனால், டில்லி பா.ஜ.க. அலுவலகம் உற்சாகமாகக் காணப்படுகிறது. 26 ஆண்டுகளுக்குப் பின்னர் டில்லியை பா.ஜ.க. கைப் பற்றியுள்ளது. அக்கட்சியினரை கொண்டாட்ட மனநிலையில் ஆழ்த்தி யுள்ளது.

# தமிழ்நாடு மீனவர்களின் பாதுகாப்பை வலியுறுத்தி நாடாளுமன்ற வளாகத்தில் எம்.பி.க்கள் போராட்டம்

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவது மற்றும் தாக்கப்படுவதை தடுக்க வலியுறுத்தி நாடாளுமன்ற வளாகத்தில் எம்.பி.க்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்கள் 97 பேரையும், பறிமுதல் செய்யப்பட்ட 216 மீன்பிடி படகுகளையும் விடுவிக்க வேண்டும், மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண வேண்டும் என வலியுறுத்தியும், மக்களைவையில் இந்த விவகாரத்தை விவாதத்துக்கு எடுக்கும்படி வலியுறுத்தியும், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி, அவையில் நேரமில்லா நேரத்தில் ஒத்திவைப்பு தீர்மானத்தை முன்வைத்தார்.

மேலும், இந்த விவகாரத்தில் மெத்தனமாக செயல்படும் மத்திய அரசை




கண்டித்து நேற்று காலை தி.மு.க. எம்.பி.க்கள் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் தமிழக எம்.பி.க்கள் நாடாளுமன்ற வாயிலில் போராட்டம் நடத்தினர். மீனவர்களை பாதுகாக்காத மத்திய அரசைக் கண்டித்தும், தமிழக மீனவர்களை மீட்ட வேண்டும் என்று வலியுறுத்தியும் கோஷமெழுப்பினர்.



# இஸ்ரேலின் 3 கைதிகளுக்காக 183 பலஸ்தீனியர்கள் விடுதலை

இஸ்ரேலுடனான போர் நிறுத்த ஒப்பந்தத்தின் ஐந்தாவது பகுதியாக, 183 பலஸ்தீன கைதிகளுக்கு ஈடாக, மூன்று இஸ்ரேலிய கைதிகள் காசாவில் விடுவிக்கப்பட உள்ளனர்.

மனிதாபிமான உதவிகள் மற்றும் பிற முக்கிய பொருள்கள் காசாவிற்குள் கொண்டு செல்வதைத் தடுப்பதன் மூலம் இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதாக ஹமாஸ் குற்றம் சாட்டியதைத் தொடர்ந்து கைதிகள் 5 ஆவது தடவையாக விடுவிக்கப்படவுள்ளனர்.

இடிபாடுகளுக்கு அடியில் 12,000



இறக்கும் மேற்பட்ட சடலங்களில் சில இஸ்ரேலிய கைதிகளின் எச்சங்கள் இருப்பதால், அவற்றை ஒப்படைக்க முடியாமல் போகலாம் என்று ஹமாஸ் கூறியுள்ளது.

மேலும் இஸ்ரேல் பளு அதிகமான உபகரணங்கள் என்கிளேவ் பகுதிக்குள் நுழைவதைத் தடுக்கிறது என்று காசா அரசாங்க ஊடக அலுவலகம் தெரிவித்துள்ளது.

6.75 பில்லியன் டொலர் மதிப்புள்ள குண்டுகள், வழிகாட்டுதல் கருவிகள் மற்றும் உருகிகள், 660 மில்லியன் டொலர் மதிப்புள்ள ஹெல்ஃபயர் ஏவுக ணைகளை இஸ்ரேலுக்கு விற்பனை செய்வதில் அமெரிக்க வெளியுறவுத் துறை கையெழுத்திட்டுள்ளது.

# அமெரிக்க அரசுடனான பேச்சை நிராகரித்த ஈரான்!

ஈரானின் பொருளாதாரத்துக்கு எதிராக புதிய தடைகளை விதித்ததற்காக ஈரானிய ஆன்மீகத் தலைவர் அய துல்லா அலி கமேனி அமெரிக்காவுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேலும் அமெரிக்காவின் புதிய திட்டங்கள் தொடர்பில் ஈரான் அரசாங்கம் வொஷிங்டனுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் அலி கமேனி எச்ச ரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்துவது புத்திசாலித்தனமானது



இல்லை என அயதுல்லா அலி கமேனி குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் தனது பொருளாதார ரீதியி லான நட்பு நாடுகளுடன் சட்டப்பூர்வமான வர்த்தகத்தை மேற்கொள்வதைத் தடுத்து ஈரான் மீது அழுத்தங்களைக் கொடுக்க அமெரிக்காவின் புதிய நிர்வாகம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக ஈரான் வெளி விவகார அமைச்சு தெரிவித் துள்ளது.

இந்த தடை விதிப்புகள் சட்டத்திற்குப் புறம்பானது என வெளி விவகார அமைச்சு கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுபோன்ற ஒருதலைபட்ச நடவடிக் கைகளின் விளைவுகளை அமெ ரிக்காவே பொறுப்பேற்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அலாஸ்காவில் காணாமல் போன விமானம் மீட்பு; மூவர் உயிரிழப்பு

கடந்த வியாழக்கிழமை அலாஸ்காவின் நோம் நகருக்கு அருகில், பத்து பயணிகளுடன் காணாமல் போன விமானத் தின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த விமானத்தில் பயணித்த 10 பேரில் மூன்று பேரின் உடல்கள் தற்போது மீட்கப்பட்டுள்ளன என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காணாமல் போன எழுவரைத் தேடும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன .

விமானத்தின் சிதைவுகள் நோம் நகரிலிருந்து 34 மைல் தொலைவில் காணப்பட்டதாக வெளிநாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது .

சீரற்ற காலநிலை காரணமாக விமானத்தைத் தேடும்



நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக் கப்படுகிறது .

பக்கங்கள் 03

கனடா முரசு

சனிக்கிழமை 08.02.2025

## கனடாவில் வாகனங்கள் மீது கல் வீசிய இளைஞர்கள் கைது

கனடாவில் ஓடும் வாகனங்கள் மீது கற்களை வீசிய இரண்டு இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

18 மற்றும் 17 வயதான இருவர் இவ்வாறு கைது செய்யப்

02






# எல்லைகளில் பாதுகாப்புப் பணிகளை அதிகரித்துள்ளனர் கனடா அதிகாரிகள்

**அமெரிக்காவில் இருந்து சட்ட விரோதமாகக் குடியேரிகள் கனடாவுக்குள் நுழையலாம் என்பதால் கனடா அதிகாரி கள் எல்லைகளில் பாதுகாப்பு பணியை அதிகரித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.**

**அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் இரண்டாவது முறையாக பதவியேற்றதில் இருந்து சட்ட விரோதமாக குடியேறியவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுத்து வருகிறார்.**

இதன் ஒரு முக்கிய நடவடிக்கையாக அமெரிக்காவில் சட்டவிரோதாக குடியேறிய லட்சக்கணக்கான மக்கள், தங்கள் சொந்த நாடுகளுக்கு நாடு கடத்தப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், அதில் இருந்து தப்பிக்க சிலர் கனடாவுக்குள் நுழைய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களில் மட்டும் அமெரிக்க எல்லையில் இருந்து கனடாவுக்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்ற 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒருவர் உயிரிழந்துள்ளார் என கூறப்படுகிறது.

அதன்போது, கனடாவின் கடுங்குளிரைத் தாங்குவதற்கான சரியான ஆடைகள் கூட இல்லாமல் சென்ற பல் வேறு நாடுகளை சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. எவ்வாறாயினும், கைது செய்யப்பட்ட வர்கள் குறித்த தனிநபர் தகவல்களை வெளியிட முடியாது என்று கனடா தெரிவித்துள்ளது.

இவ்வாறனதொரு பின்னணியில், அமெரிக்காவில் இருந்து சட்டவிரோதமாகக் குடியேரிகள் கனடாவுக்குள் நுழையலாம் என்பதால் அதிகாரிகள் எல்லைகளில் பாதுகாப்பு பணியை அதிகரித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

# கனடாவில் வீடுகள் உடைப்பு சம்பவங்கள் குறித்து எச்சரிக்கை



கனடாவின் யோர்க் பிராந்தியத்தில் வீடுகள் உடைக்கப்பட்டு கொள்ளையிடும் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யோர்க் பிராந்திய பொலிஸார் இந்த விவகாரம் தொடர்பில் பொதுமக்களை எச்சரித்துள்ளனர்.

அண்மையில் ரிச்மண்ட் ஹில் பகுதியில் குடியிருப்புகள் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொள்ளையர்கள் பசை போன்ற ஒரு பதார்த்தத்தை பயன்படுத்தி கதவுகளை உடைத்து உள்ளனர் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

யோர்க் பிராந்தியத்தில் இவ்வாறான இரண்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரண்டு சம்பவங்களின் போதும் சந்தேக நபர்கள் அடையாளம் காணப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

அதிகாலை வேளையில் இந்த கொள்ளை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொள்ளை சம்பவங்களின் போது ஏற்பட்ட இழப்புகள் குறித்து தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.




# அலைபேசி விற்பனை நிறுவனத்தின் காட்சி அறையை உடைத்து கொள்ளை

கனடாவின் ஸ்காப்ரோ பகுதியில் உள்ள அலைபேசி விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றின் காட்சி அறையை உடைத்து அலைபேசிகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

சுமார் 40,000 டொலர்கள் பெறுமதியான அலைபேசிகள் இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளன.


இந்த திருட்டு சம்பவம் குறித்த காணொளிகள் வெளியிடப்பட்டுள்ளன. ரொறன்ரோவின் கிங்ஸ்டன் மற்றும் மெக்வோன் வீதிகளுக்கு அருகாமையில் இந்த வர்த்தக நிலையம் அமைந்துள்ளது.

முகமுடிகளை அணைந்த மூன்று பேர் சுத்தியல்களைக் கொண்டு காட்சியறையை உடைத்து அலைபேசிகளை கொள்ளையிட்டுள்ளனர்.

மேலும் ஒருவரும் இந்த கொள்ளை சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த கொள்ளை சம்பவத்தின் போது உரிமையாளரின் மகன் கொள்ளையை தடுக்க முயற்சித்த போதும் அது வெற்றி அளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. கொள்ளையர்கள், அந்த இளை ஞரை தாக்கி பொருள்களை கொள்ளை இட்டுச் சென்றுள்ளனர் என தெரிவிக் கப்படுகிறது.

இதேவேளை, இந்த கடையின் உரிமையாளர் புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட சிகிச்சை பெற்று வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.




## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளனர். பயணம் செய்த வாகனங்கள் மீது இவ்வாறு கற்கள் வீசி எறியப்பட்டுள்ளன.

குறிப்பாக மார்க்கம் மற்றும் வித்சர்ச் பகுதிகளில் இந்த கல் வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த சந்தேக நபர்கள் இருவருக்கு எதிராகவும் சுமார் 31 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வழக்கு தொடரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்தேக நபர்கள் இடமிருந்து ஆயுதம் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒன்றாரியோ மாகாண பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.





# கனடாவின் ரொறன்ரோ பிராந்தியத்தில் வார இறுதி நாள்களில் கடும் பனிப்பொழிவு

கனடாவின் ரொறன்ரோ பிராந்தியத்தில் எதிர்வரும் வார இறுதி நாள்களில் கடும் பனிப்பொழிவு ஏற்படக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளதாக அந் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன், சில பகுதிகளில் சுமார் 10 சென்றி மீற்றர் வரையிலான பனிப்பொழிவு ஏற்படும் என கனேடிய வளிமண்டலவியல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இன்று மற்றும் நாளை ஆகிய இரண்டு தினங்களிலும் பனிப்பொழிவு அதிக அளவில் காணப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சில இடங்களில் 10 சென்றி மீற்றர் முதல் 20 சென்றி மீற்றர் வரையிலான பனிப்பொழிவும் ஏற்படும் எனவும் கூறப்படுகின்றது.

மேலும், சீரற்ற காலநிலை காரணமாக போக்குவரத்து செய்வதில் சிரமங்கள் ஏற்படும் எனவும் சில இடங்களில் சாரதிகளால் வீதியை பார்க்க முடியாத அளவிற்கு பனிப்பொழிவு நிலவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், வாகனம் செலுத்துபவர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.









# கனடாவில் காணாமல்போயினர் 20 ஆயிரம் இந்திய மாணவர்கள்

இந்தியாவிலிருந்து கனடாவுக்கு மாணவர்கள் விசாவில் சென்ற நிலையில், இதுவரை எந்த கல்லூரியிலும் சேராமல் 20 ஆயிரம் மாணவர்கள் எங்கிருக்கிறார்கள் என்ற தகவலே தெரியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் வெளியான தரவுகளின்படி, இவர்கள் பற்றிய எந்த தகவலும் அரசிடம் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு காணாமல் போன மாணவர்களின் பின்னணி பற்றி வெளியாகும் தகவல்களில் பல மாணவர்கள் கனடாவில் உயர் கல்வி பயில சேர்ந்த கல்லூரி அல்லது பல்கலைக்கழகங்கள், கனடா சென்று பார்த்த பிறகுதான் அது போலியானவை என்றும் அவ்வாறு கல்லூரி அல்லது பல்கலையே இல்லை என்றும் தெரிய வந்திருக்கலாம்.

இதுபோன்ற மாணவர்கள் ஏதேனும் ஒரு சிறிய கல்வி நிறுவனங்களில் சேர்ந்து படித்துக்கொண்டிருக்கலாம் அல்லது கிடைத்த வேலையில் சேர்ந்து எப்படியோ கனடாவில் வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இது பற்றி வெளியான தகவல்களில், மிகப்பெரிய பல்கலைக்கழகத்தின் பெயரில், போலியான முகவர்கள் மூலம் இந்திய மாணவர்கள் சேர்க்கைக்கான கடிதம் பெற்று கனடா வந்து விடுகிறார்கள். பல லட்சம் கட்டி கனடா வந்து பார்த்தால், மோசடி செய்யும் ஒரு அலுவலகம் தான் இங்கே இருக்கும். அதனால், திரும்ப செல்ல முடியாமல், கிடைத்த வேலையைப் பார்த்துக்கொண்டிருப்பார்கள் என்கிறார்கள். சிலரோ, மாணவர்கள் விசா மூலம் கனடாவுக்குள் வந்துவிட்டு, சட்டவிரோதமாகத் தங்கியிருந்து வேலை செய்து வருகிறார்கள் என்றும் கூறப்படுகிறது.